Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி –30 | 12–04–2004 | திங்கட்கிழமை | ஓசை –54




# அம்பாறை கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்

# இரத்தம் சிந்தாமல் புலிகளால் மீட்பு!

## பல போராளிகளும் விடுவிக்கப்பட்டனர்

(அம்பாறை)

**அம்பாறை மாவட்டத்தில் கருணா குழுவின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் இரத்தம் எதுவும் சிந்தாமல் விடுதலைப்புலிகளினால் மீட்டெடுக்கப்பட்டது. சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையின் மூலம் கஞ்சிகுடிச்சாறு உட்பட அனைத்துப் பகுதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. பல போராளிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.**

மட்டக்களப்பு மாவட்டம் வட பகுதியை இரு தினங்களுக்கு முன்னர் மீட்டெடுத்த விடுதலைப்புலிகள், அடுத்த கட்ட நடவடிக்கையாக அம்பாறை மாவட்டத்தில் இருந்த தமது கட்டுப்பாட்டுப் பகுதியை மீட்டெடுத்துள்ளனர்.

தளபதி ஜனார்த்தன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்நகர்வின்போது எதிர்ப்பு எதுவும் எழவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த விடுதலைப்புலிகள், கருணா குழுவிற்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் அதனை நிறுத்திக் கொள்ளுமாறும், போராளிகளைப் பதிவு செய்து கொள்ளுமாறும் அடுத்த கட்டம் குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் எனவும், ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் இதுவரை 200 வரையான போராளிகள் புலிகளின் மீட்புப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### –1990ஆம் ஆண்டு காலப் பகுதியில்–

## காணாமற்போனோர் குறித்த ஆவணத் தேடலில் ஐ.சி.ஆர்.சி.

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு-கிழக்கில் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனோர் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆவணத் தேடலில் ஈடுபட்டுள்ளது. இதன் அடிப்படையில் காணாமற்போனோரின் தகவல்கள் திரட்டப்படுகின்றன. இந்த தகவல் திரட்டல் 2004ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவுறுத்தப்பட்டு அவை அரசாங்கத்தினதும், தமிழீழ விடுதலைப்புலிகளினதும் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இருந்து காணாமற்போனோர் தொடர்பில் இதுவரை தமக்கு சுமார் 20 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் 9 ஆயிரம் முறைப்பாடுகளுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன. எனினும் 11 ஆயிரம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### -கரடியனாறிலுள்ள-

## தேனகம் முன் போராளிகளின் பெற்றோர் கருணா குழுவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியிலுள்ள தேனகத்தின்முன் நூற்றுக்கணக்கான போராளிகளின் பெற்றோர் திரண்டு கருணா குழுவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

நேற்றுக் காலை நடைபெற்ற ஆர்பாட்டத்தின் போது போராளிகளான தம்பிள்ளைகளை தம்மிடம் ஒப்படைக்குமாறும் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்குமாறும் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### -சபாநாயகர் பதவிக்கான வாக்கெடுப்பில்-

## ஐ.தே.க.வேட்பாளருக்கு ஆதரவு வழங்க சம்பந்தனிடம் ரணில் கோரிக்கை

(திருகோணமலை)

புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகர்பதவிக்கானவாக்கெடுப்பில் தமது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும்படி ஐக்கிய தேசியக்கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைக் கோரியுள்ளது. முன்னாள் பிரதமரும் ஐக்கியத்தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம சிங்க, இக்கோரிக்கையை தமிழ்த்தேசியக்கூட்டமைப்புப் பாராளுமன்றக்குழுவின் தலைவர் இரா.சம்பந்தனுடனான சந்திப்பின்போது விடுத்தார் என்று அறியவருகின்றது.

ரணிலின் அழைப்பின் பேரில் அவரை சம்பந்தன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக்குழுவின் முதலாவது கூட்டம் கொழும்பில் நடைபெற்றபின்னர் சந்தித்தார்.

பொதுத்தேர்தல் முடிந்த பின்னர் தோன்றியுள்ள அரசியல் நிலைவரம்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பேருந்துகளில் கருணாகுழுவினர் சோதனை

பொலநறுவையிலிந்து மட்டக்களப்பிற்கு வரும் பேருந்துகளை கருணா குழுவினர் சோதனையிட்டு அதில் போராளிகள் ஏவராவது உள்ளார்களா என தேடிவருகின்றனர்.

கருணாகுழுவிடமிருந்து தப்பிச் செல்லும் போராளிகள் பொலநறுவை மாவட்டத்திற்குச் சென்று அங்கிருந்து தத்தமது வீடுகளுக்கு சென்று விடாது தடுக்கவே இச்சோதனைகள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

### -சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் -

## அனைத்துப் பதவிகளில் இருந்து அர்சுன ரணதுங்க விலகல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அனைத்து பதவிகளில் இருந்தும் அர்சுன ரணதுங்க விலகியுள்ளார். அது தொடர்பில் செய்தி சேவைஒன்றுக்கு தகவல் அளித்த அவர் தாம் விளையாட்டுத்துறையை ஊக்கிவிப் பதற்காகவே அரசியலுக்குள் பிரவேசித்ததாக தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக

(08 ஆம் பக்கம் பார்க்க)

## 2 இல.தமிழர்கள் இராமேஸ்வரத்தில் கைது

இலங்கை தமிழ் இளைஞர்கள் இருவர் இந்திய இராமேஸ்வரம் கரையோர காவல்துறையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் வெளிநாட்டவர் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதீபன் மற்றும் கணேஸ்வரன்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அனலைதீவில் ஈ.பி.டி.பி.யினரின் முகாம் மக்களால் தீயிட்டு எரிப்பு

(யாழ்ப்பாணம்)

அனலைதீவில் நிலைகொண்டுள்ள ஈ.பி.டி.பி. தேசவிரோத கும்பலின் முகாம் அப்பகுதி மக்களால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை 7.30 மணியளவில் அலை அலையாக திரண்ட அப்பகுதி மக்கள் முகாமைச் சுற்றிவளைத்து முற்றாக எரித்து நாசமாக்கியுள்ளனர். இதன்போது அங்கிருந்த ஈ.பி.டி.பி. தேசவிரோதிகள் தப்பியோடி விட்டனர்.

இதனை தொடர்ந்து ஈ.பி.டி.பி. யினருக்கு பாதுகாப்பு வழங்க வந்த பொலிசார் சாராமாரியாக நடத்திய துப்பாக்கிச்சூட்டுத்தாக்குதலில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.அனலைதீவைச் சேர்ந்த ச.சிவா (வயது 33) என்பவரே காயம டைந்தவ ராவார். இவர் அனலைதீவு வைத்தியசாலையில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.காங்கிரஸ் உறுப்பினர்களை பிரதமர் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரை புதிய பிரதமர் மகிந்தராஜபக்ச சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக்காலை அலரிமாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சிகள் பொருளாதார நிலைமை மற்றும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி அன்னைபூபதி நினைவுதினம் யாழ். குடாநாட்டில் அனுஷ்டிக்க ஏற்பாடு

இந்திய வல்லாதிக்க ஆக்கிரமிப்புக்கெதிராக உண்ணாநோன்பிருந்து உயிர்துறந்த அன்னை பூபதியின் 16வது நினைவுதின நிகழ்வுகள் எழுச்சியுடன் எதிர் வரும் 19ம் திகதி யாழ் குடாநாட்டில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

முன்னதாக 16,17 மற்றும் 18ம் திகதிகளில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக சிரமதான நிகழ்வுகளை நடாத்த குடாநாட்டைச்சேர்ந்த பலபொது அமைப்புக்கள் ஏற்பாடுசெய்துவருகின்றன.

இறுதித்தினமான 19ம் திகதி வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி மற்றும் தீவகக்கோட்டங்கள் ரீதியாக அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும், நினைவஞ்சலி கூட்டங்களும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, அன்னைபூபதியின் நினைவு நாட்கள் தற்போதுகுடாநாட்டின் பல பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள், முக்கிய சந்திப்பகுதிகள் மற்றும் பொது அமைப்புக்களது அலுவலகங்களில் அன்னை பூபதியின் உருவப் படங்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இறுதி நாளன்று அன்னை பூபதி

(08 ஆம் பக்கம் பார்க்க)



## குடியிருப்பு தொடர்பான பிணக்கு; வாள்வெட்டில் இளைஞன் காயம்

(அலுவலகசெய்தியாளர்)

வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில் கிளி.மாவட்ட மருத்துவமனையில் இளைஞன் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 9.30 மணிக்கு கிளிநொச்சி ஆனந்தநகர்ப்பகுதியில் உள்ள ஒரே வீட்டில் குடியிருந்த இரண்டு தரப்பினரிடையே ஏற்பட்ட குடியிருப்பு தொடர்பான பிணக்கு வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்து வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது.

இவ்வாறு வாள்வெட்டுக்கு இலககானவரான 28 வயதுடைய ரங்கசாமி கிருஷ்ணராஜா என்ற இளைஞன் முதுகிலும் கையிலும் வெட்டப்பட்ட நிலையில் கிளி.மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக கிளி.காவல்துறையினருக்கு தகவல் கிடைத்ததை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறையினர் சந்தேக நபரைக்கைது செய்ததுடன் சண்டையில் பயன்படுத்தப்பட்ட வாளையும் கைப்பற்றினர். சம்பவம் தொடர்பானவிசாரணைகள்தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (லோ)

# தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்திற்கு மக்கள் தங்கள் ஆணையை வழங்கியுள்ளனர்

## கிளி. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை

(கிளிநொச்சி)

தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்பவற்றைப் பெற்றிடுவதற்கான வலிமைமிக்க போராட்டத்திற்கு மக்கள் தங்கள் ஒட்டுமொத்தஆணையை வழங்கியுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் தேர்தல் முடிவு குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில், தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தமிழர்கள் ஒன்றுபட்டு நின்றால் வெற்றி உறுதி என ஒன்றுபட்டு நின்று வாக்களித்தமையால் தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று வரலாறு காணாத மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இதன் மூலம் தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்பனவற்றைப் பெற்றிடுவதற்கான வலிமைமிக்கபோராட்டத்திற்கு மககள்தங்கள்ஒட்டுமொத்த ஆணையை வழங்கியுள்ளனர். இதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் வேறல்ல என்பதை மெய்ப்படுத்தி யுள்ளனர்.

அல்லற்பட்டு ஆற்றாக அழுத கண்ணீருடன் ஊர்விட்டு ஊரோடி இரவல் வீட்டில் இருந்து இடர் தாங்கி நலிந்து கண்ணீர் செந்நீர் இரண்டையும் உகுத்த கிளிநொச்சி மாவட்ட மக்கள் அணி அணியாய்த் திரண்டு மடை திறந்த வெள்ளம் போல் ஓடி, ஓடிச் சென்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் வாக்களித்த காட்சியை என்றும் மறக்க இயலாது. இப்பெரு வெற்றியை வழங்கிய முதல் நாளே வந்து இடர்களைத் தாங்கி உறுதி குலையாத உள்ளத்துடன் வாக்களித்த மக்களுக்கு கிளிநொச்சி மாவட்ட எழுச்சிப் பேரவை நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

# குமரபுரம் கிராம அ.ச புதிய கட்டடம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

குமரபுரம்கிராமஅபிவிருத்தி சங்க புதிய கட்டடத்திறப்புவிழா நேற்று நண்பகல் 12.00 மணிக்கு சங்கத் தலைவர் ந.மகேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை கிராம சேவை அலுவலர் க. கனகராசா சங்கப் பொருளாளர் க.சபாரத்தினம் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் ப.நாகேந்திரம் ஏற்றிவைத்தார்.

அடுத்து குமரபுரம் மனித வள அலுவலர் க.தீபன் புதிய கிராம அபிவித்திச்சங்க மண்டபத்தின் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார். கிளி. வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் ம.க.பத்மநாதன் கிராம அபிவிருத்திச் சங்க அலுவலகத்தின் நாடாவினை வெட்டி திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் குமரபுரம் கிராம மக்கள் பெருமளவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மன்னார் கடற்பரப்பில் 3 நாட்களாக இந்திய மீனவர்கள் அத்துமீறல்

### –சிறில. கடற்படை பாராமுகம்

பேசாலை எருக்கலம் பிட்டி போன்ற கடற்பரப்பில் கடந்த மூன்று நாட்களாக இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ளனர். இது சம்பந்தமாக சிறிலங்கா கடற்படையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மி)

### -தேசியப்பட்டியல் பா.உ.நியமனம்-

# சட்டமா அதிபருடன் ஆராய தேர்தல் திணைக்களம் முடிவு

தேசியப்பட்டியலில் ஏற்கனவே குறிப்பிடப்படாத ஒருவரை தேசியப்பட்டியலில் நியமிப்பது தொடர்பாக சட்டமா அதிபருடன் ஆலோசனை கலக்கவுள்ளதாக சிறிலங்கா பிரதித் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

தேசியப் பட்டியலில் இடம்பெறாத ஒருவரை எக்கட்சியாவது நியமிக்குமாறு கோரவில்லை. ஆனால் அவ்வாறு கோரப்பட்டால், அது குறித்து சட்டமா அதிபருடன் ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பௌத்த சாசன அமைச்சை பிரதமரே பொறுப்பேற்க வேண்டும்

### அஸ்கிரிய அனுநாயக்க தேரர்

புத்தசாசன அமைச்சையும் பிரதமரே வைத்திருக்க வேண்டும் என அஸ்கிரிய அனுநாயக்க தேரர் கலகமசிறி அட்டாசி தேரர் சிறிலங்காப்பிரதமர் மகிந்தராஜபக்சவிடம் தெரிவித்துள்ளார்.

புத்தசாசன அமைச்சு முக்கியமான அமைச்சுக்களில் ஒன்றாகும். எனவே இதைப்பொருத்தமான ஒருவரே பொறுப்பேற்க வேண்டும் சனாதிபதியுடன் புரிந்துணர்வுடன் பிரதமர் இம்முக்கிய அமைச்சுப்பொறுப்பை ஏற்கவேண்டும்என்றார்.பௌத்த சாசன அமைச்சு இப் பொழுது சனாதிபதியின் பொறுப்பில் உள்ளது.

# சென்பீற்றர்ஸ் மெதடிஸ்த தேவாலயம் 13ஆம் திகதி முதல் மீள இயங்கும்

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பெரும் பாதிப்பிற்குள்ளாகி செயலிழந்து போயிருந்த யாழ். சென்.பீற்றர்ஸ் மெதடிஸ்த தேவாலயம் மீண்டும் எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்கிழமை முதல் மீள இயங்கவுள்ளது.

மீள நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தின் அர்ப்பணிப்பு ஆராதனை நிகழ்வு அன்று காலை 10.30 இற்கு இடம்பெறவுள்ளது நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த சபையின் தலைவர் வணக்கதிற்குரிய ஏ.நோயல் பி.பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

தற்போது முகாமைக்குழுவாக வணகே.கருணசேகர கடமையாற்றிவருகின்றார்.

யாழ். நகரின் மையப்பகுதியில் பொது நூலகம் மற்றும் சுப்பிரமணியம் பூங்கா, யாழ். மத்திய கல்லூரி ஆகிய வற்றை அண்டிஅமைந்துள்ள இத்தேவாலயம் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் விமானக்குண்டு வீச்சுமற்றும் எறிகணைவீச்சாலேயே பெரும் அழிவுகள் ஏற்பட்டிருந்தது. (27)

# சிறந்த சமூகமொன்றை நிலைநாட்டுவதே ஐ.ம.சு. முன்னணியின் அரசாங்கத்தின் கடமை

### - சிறில. பிரதமர் மகிந்தராஜபக்ச

(கொழும்பு)

சிறந்த சமூகம் ஒன்றை நிலைநாட்டுவதே எமது அரசாங்கத்தின் பிரதான கடமை என்று புதிய பிரதமர் மகிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எமது அரசாங்கம் விமர்சனங்களுக்கு மதிப்பளித்து சரியான பாதையில் செல்லும் பலம் வாய்ந்த அரசாங்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இராமானிய பீட மகாநாயக்க தேரரை நேற்று சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.பௌத்த சாசனத்தை பாதுகாக்க எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும்அதுஅரசாங் கத்துக்கு அரசியல் சாசனத்திலேயே வழங்கப்பட்டுள்ளது.இந்த பொறுப்பை சரிவர நிறைவேற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம் எனவும் பிரதமர் மகிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார்.

# 31 ஆம் நாள் நினைவு தினம்

பிறப்பு

05

01

1970



இறப்பு

13

03

2004

## நாட்டுப்பற்றாளர்

# பொன்னையா சிறிதரன்

(நாவற்குழி)

A-9 வீதி, விபத்தில் சாவடைந்த இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு இவரோடு சாவடைந்த நாட்டுப்பற்றாளர் ஆங்கில ஆசான் ஈஸ்வரச்சந்திரனுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதோடு இவர்களது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்/பணியாளர்கள்,
டாக்டர் பொன்னம்பலம் ம.மனை,
மருந்துப்பால்மா வகைகள்.

(சி-9366)

# கால் நடைகளின் தரம் உயர்த்தல் நடவடிக்கை

(கிளிநொச்சி)

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இவ்வருடம் பளை, உருத்திரபுரம், ஸ்கந்தபுரம், வட்டக்கச்சி, பரந்தன், முழங்காவில் ஆகிய பிரதேசங்களில் காராளி செயற்கை முறை சினைப்படுத்தல் உபநிலையங்கள் திறந்து வைக்கப்பட்டு கால்நடை செயற்கை முறை சினைப்படுத்தல் சேவை விஸ்தரிக்கப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் செயற்படும் கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தால் 4.5 மில்லின் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருணமிய மதியுரையகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்நடை நல்வின விருத்திசெயன் முறையால் வன்னியில் பெருமளவில் கால் நடைகளின் தரம் உயர்த்தப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என எதிர்பார்ப்பதாக காராளி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையப் பொறுப்பாளர் மா.மகாதேவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி 155ஆம் கட்டையில் இயங்கும் காராளி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தின் பிரதான நிலையத்துடன் வட்டக்கச்சி, முழங்காவில், புளியம்பொக்கணை போன்ற இடங்களில் ஏற்கனவே உபநிலையங்கள் இயங்குவதுடன் ஜெயபுரம், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை, கனகராயன் குளம் ஆகிய இடங்களிலும் இச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (15)

# அறிவித்தல்

இலண்டன் ரீ.ஆர் ரெக் (T.R Tech) நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தினரால் சர்வதேச அங்கீகாரம் உடைய சான்றிதழ்களுடன் கூடிய தகவல் தொழில்நுட்ப பயிற்சிக்கு விண்ணப்பித்து நேர்முகத் தேர்விற்கு தோற்றியவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 14.04.2004ஆம் திகதி, புதன்கிழமை காலை 11.00 மணிக்கு, கிளிநொச்சி தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளமையால் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளவும்.

தகவல்:-

அதிபர்,
தொழில்நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-9365)

# ஈராக்கில் போரிடும் சகல தரப்பினரையும் கட்டுப்பாட்டுடன் செயற்பட ஐ.நா. வலியுறுத்து

## யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்கவும் நிர்ப்பந்தம்

**ஈராக்கில் நடைபெறும் மோதல்களில் பங்குபற்றும் சகல தரப்பினருக்கும் ஐ.நா பொதுச் செயலர் கொபி அனான் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கடந்த ஒருவார காலத்தில் மிக மோசமான தாக்குதல்கள் ஈராக்கில் இடம்பெற்றுள்ளமையால் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஐ.நா.பொதுச் செயலர் கொபி அனான் அமெரிக்க வெளிவிவகார அமைச்சருடனும் ஈராக்கில் உள்ள தமது விஷேட ஆலோசகர் பக்தார் தருமியுடனும் தொலைபேசி மூலம் நேற்றுக்காலை இது தொடர்பாக உரையாடியுள்ளார்.

இதேவேளை பலூஜாநகரில் உள்ள இஸ்லாமிய மதத்தலைவர்களும், பொது மக்களின் பிரதிநிதிகளும் அமெரிக்கக் கடற்படையினருக்கும் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் விடுத்த வேண்டுகோளில் உடனடியாக யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுள்ளார்கள்.

யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படாவிட்டால் நகரம் முழுவதுமே அழித்தொழிக்கப்பட்டு விடும் எனவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

இதேவேளை பலூஜா நகர் மீது அமெரிக்க கடற்படையினர் கடைப்பிடித்துவரும் முற்றுகையை கைவிடாது விட்டால் தாங்கள் பணயக்கைதிகளாக வைத்துள்ள அமெரிக்கப் பிரஜைகளை படுகொலை செய்யப்போவதாகவும் தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஈராக்கில் உள்ள அமெரிக்கா தலைமையிலான படை அணிகளுக்கும் சன்னி முஸ்லிம் போராளிகளுக்கும் இடையே கடந்த ஒருவாரகாலமாக நிகழ்ந்து வரும் மோதல்களை முடிவிற்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த மோதல்களை முடிவிற்குக் கொண்டுவரும் முகமாக முதல்கட்ட நடவடிக்கையாக அமெரிக்காவால் நியமிக்கப்பட்ட ஈராக்கிய நிர்வாகிகளுக்கும் பலூஜா நகரப் பிரமுகர்களுக்கும் இடையே சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யுத்தநிறுத்தத்திற்கு சன்னி முஸ்லிம்கள் உடன்படும் பட்சத்தில் பலூஜாவில் நிலை கொண்டுள்ள தமது துருப்புகளுக்கும் அதற்கு தயாராக இருப்பதாக அமெரிக்கத் தளபதிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் பாக்தாத்தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய ஈராக்கிற்கான அமெரிக்க தளபதி தற்சமயம் பலூஜா வில் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வி அடையும் பட்சத்தில் அமெரிக்கப் படைகள் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிப்பார்கள் எனவும் கூறியதோடு சன்னி முஸ்லிம் தீவிரவாதிகளிடம் இருந்து உடனடியாக இதற்கொரு பதிலை தாம் எதிர்பார்ப்பதாகவும், அத்துடன் அமெரிக்க விஷேட படைப்பிரிவினர் பலூஜாவிற்கு அனுப்பிவைக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பொடோவை தக்கவைக்க பா.ஜ.க முயற்சி

பொடோ சட்டம் கடுமையான சில அம்சங்களுடன் தொடர்ந்தும் நீடிக்க வேண்டுமென பா.ஜ.கட்சியின் தேசிய பொதுச்செயலாளர் இலகஹேசைன் விலியுறுத்தியுள்ளார். பொடோ மறு ஆய்வுக்குழு தனது பரிந்துரை தான் அளித்துள்ளது. இது தொடர்பாக உச்சநீதிமன்றம் இறுதித்தீர்ப்பளிக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



பலூஸாவில் ஈராக்கியரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் அங்கு காவல் கடமை யிலிருக்கும் அமெரிக்கப்படையினர்.

# அமெரிக்க படையினரின் பல நிலைகள் மீது ஏக காலத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்!

## - சன்னி முஸ்லிம்கள் திட்டமிட்ட நடவடிக்கை

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திற்கு வடக்கே உள்ள பக்குவாநகரில் அமெரிக்கத்துருப்பினருக்கு எதிராக மோதல்கள் நடந்துள்ளன.

இதன்போது தீவிரவாதிகள் மிகவும் திட்டமிட்டமுறையில் ஈராக்கின் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீதும், ஆளுநர் காரியாலயத்தின் மீதும், அமெரிக்கப்படையினர் தங்கி இருந்த இடம் ஒன்றின் மீதும் ஒரே நேரத்தில் இந்ததாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்த நகரின் பல்வேறு பகுதிகளிலும் மோதல்கள் நடைபெற்றுள்ளன.

இதேவேளை இந்த மோதல் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை வேறொரு இலக்கைத் தாக்கும் நோக்கில் நூற்றுக்கணக்கான சன்னி முஸ்லிம் தீவிரவாதிகள் பாலம் ஒன்றிற்கு அருகே கூடியபோது அவர்களை பீரங்கிகள் கொண்டு தாக்கி நாற்பது பேரை கொண்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவின் இந்தக் கூற்றினை ஈராக்கில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு செய்தியாளர்கள் ஊர் ஜிதப்படுத்தவில்லை.

அமெரிக்காவின் பாரிய தாக்குதல் எனக்கூறப்படும் இந்தச் சம்பவம் குறித்து சுதந்திரமான தகவல்கள் ஏதும் வெளியாகவில்லையென அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை பாக்தாத்தில் அமெரிக்கத்துருப்பினருக்கு எதிராக புதிய தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சன்னி முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் உள்ள பலவீதிகளில் அமெரிக்கத் துருப்பினருக்கு எதிரான மோதல்கள் நடைபெற்றுள்ளதாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.



மேற்குகரை ஹெப்ரோன்நகரில் அமெரிக்கப்படையினருக்கெதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது சதாமினதும் பின்லாடனினதும் உருவப்படம் ஏந்திச் செல்லும் பலஸ்தீனர்கள்.

# ஜோர்தானில் அமெரிக்கர்கள் மீதான பாரியதாக்குதல் திட்டம் முறியடிப்பு !

## -அல்-ஹைதாவின் முயற்சியென தகவல்

ஜோர்தானில் வெடிபொருட்களை ஏற்றிச்சென்ற கார்களை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஜோர்தானில் உள்ள அமெரிக்க நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக அல்-ஹைதா இயக்கத்துடன் தொடர்புள்ளதாக நம்பப்படும் இரகசியக் குழுவொன்று இந்த வெடிபொருட்களை கொண்டு சென்றுள்ளதாக சிரேஷ்டபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜோர்தானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மீது ஏனைய அமெரிக்க நிறுவனங்கள் மீதும் தாக்குதலை நடத்துவதே இந்தக்குழுவின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் தொடர்பாக அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கைகளுக்கு ஜோர்தான் ஆதரவு அளிப்பதை இஸ்லாமிய தீவிரவாதிகள் எதிர்த்து வருகின்றனர். என அரசியல் ஆய்வாளர்களும் ஜோர்தானிய அரசியல் வாதிகளும் தெரிவித்துள்ளனர்.



பிலிப்பைன்ஸ்ஸில் சிறையை உடைத்து தப்பிச் சென்றவர்களை கண்டு பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பொலிசார்.



காசாமுனை – கான் யூனிஸ் நகரில் கைது செய்யப்பட்ட பலஸ்தீன இளைஞரை வைத்திருக்கும் இஸ்ரேலிய இராணுவம். (இங்கு இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 12 வயது சிறுமி பலியானமை குறிப்பிடத்தக்கது)

# ஜப்பானிய பணயக்கைதிகளை ஊறு விளைவிக்காது விடுவிக்குக

## - உறவினர்கள் கோரிக்கை

ஈராக்கில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள ஜப்பான் நாட்டவரை எந்தவித ஊறும் விளைவிக்காது விடுதலை செய்யுமாறு பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி பணயக்கைதிகளின் உறவினர்களின் செய்தி மற்றும் வேண்டுகோள் அடங்கிய வீடியோ நாடாவை அரபுத் தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்பியுள்ளது.

அதில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஜப்பானியர்கள் மூவரும் ஈராக்கிய மக்களின் மேம்பாட்டிற்குமட்டுமே ஈராக்கில் தங்கி தங்கள் பணிகளை திறம்படச் செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தஒளிநாடாவில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரும் தோன்றிப் பணயக்கைதிகளை உடனடியாக விடுதலை செய்யுமாறு கேட்டுள்ளார்.

இவர்களை பிடித்து வைத்துள்ள ஈராக் தீவிரவாதிகள் ஜப்பானிய படைகள் ஈராக்கிலிருந்து விலக்கப்பட்டாலே கைதிகள் விடுவிப்பு சாத்தியமாகும் என்றும் அதற்கு நேற்று வரையான காலக்கெடுவை விதித்திருந்தமையும் தெரிந்ததே.

# சர்வாதிகாரப் போக்கில் செயற்பட்டுவரும் ஜெயலலிதாவின் மக்கள் ஆதரவு சரிகின்றது

## - செய்தியாளர் கூட்டமொன்றில் வைகோ

(சென்னை)

பொடோ மறு ஆய்வு குழுவின் தீர்ப்பிற்குப் பின்னர் தி.மு.க. தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு அதிகரித்து வருகின்றது.

இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ நேற்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பொடோ மறு ஆய்வுகுழு தம்மை நிரபராதி என்று அறிவித்துள்ளது ஆனால் நான் 19 மாத காலம் சிறையில் இருந்தமையினால் அதற்கு தமிழக அரசிடம் இழப்பீடுகோருவது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.


தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் அனைத்துத் தரப்பினருமே பாதிக்கப்பட்டுள்ளார்கள். முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மக்களிடையே நம்பிக்கையை இழந்துவிட்டார். வருமானத்திற்கு அதிகமாகச் சொத்துச் சேர்ந்த வழக்கில் பொருளாதாரக் குற்றவாளியாக இருக்கும் அவர் பதவி விலக வேண்டும். என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சர்வாதிகாரப் போக்கில் செல்லும் செல்வி ஜெயலலிதாவை அகற்றுவதற்கு வரும் மக்களவை தேர்தல் முடிவுகள் ஒரு முன்னோடியாக அமையும் என்றும்,

தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் தலைவி திருமதி சோனியாகாந்தி பிரதமராகும் வாய்ப்பு ஏற்படுமானால் அதனை தமது கட்சி ஆதரிக்கும் எந்த சூழ்நிலையிலும் பா.ஜ.கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ளப் போவதில்லை என்று கூறிய அவர்,

அரசியல் சாசனத்தில் 356 பிரிவைப் பயன்படுத்தக் கூடாது என்பதில் தமது கட்சி உறுதியாக இருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# "ரணில் தோற்றதேன்?"



ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தோல்வியுற்றமையின் பின்னணி என்ன? பின்னணி என்ன என்பதற்கான விடையை அறிய முன்பு இதோ இவற்றைச் சற்று சிந்திப்போம்.

பொதுமக்களுக்கு குறிப்பாக பெரும்பான்மையினருக்கு கஸ்டத்தைக் கொடுத்து பின்னர் அதற்கான நிவாரணத்தை வழங்க ரணில் முயற்சித்திருந்தால் சற்று கவனம் எடுத்திருக்கவேண்டும். அதிலும் நிவாரணமளிக்க முதல் தனது கால் துடைப்பான் என்ற (Carpet) அரசாங்கத்தை அவருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக சந்திரிகா இழுத்துவிட்டால் ரணில் மூக்குடைய விழுவார்... இதனை முன்பும் குறிப்பிட்டிருந்தேன். மக்கள் ஐ.தே.கட்சிக்கு அன்று வாக்களித்தது யுத்தத்தை நிறுத்தவும் வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் மட்டுமல்ல பொருட்கள் விலையிறங்கி உழைக்கும் பணத்தில் சிறிது மிச்சம் பிடிக்கவும் அவர்கள் சிந்தித்தார்கள். பொருட்களை விலையேற்றுவது உண்மையில் ஒரு மனிதனின் கைகால்களை கட்டிப்போடுதல் போன்றது. "இரக்கமற்ற அரசாங்கம்" என்று மக்கள் மனதில் புகைந்தனர். மின்சாரக் கட்டணம், பொருட்கள் விலையேற்றம், போக்குவரத்துக் கட்டணம் அதிகரிப்பு ஆக மக்கள் இந்த ஐ.தே.மு அரசின் மீது வெறுப்படைந்ததில் புதுமையில்லை.

தேர்தலில் நாம் வெல்வோமா? ஏன் முடியாது என்று அரச அதிகாரிகள் சவால் விட்டதையும் மக்களுக்கு இரண்டு வருடகால ஆட்சியில் நாம் என்ன செய்து குவித்தோம் என அரசியல்வாதிகள் சிந்தித்ததையும் கூட அன்று இதே பகுதியில் நாம் குறிப்பிட்டது நினைவிருக்கலாம். அதேபோல் "இன்னும் இந்த அரசுக்கு மக்களின் மனதை வெல்லும் வகையிலான அரசியல் நிர்வாகம் தெரியவில்லை. கட்சிக்காரர்களை வெல்லவோ, நாட்டை எந்த நிலையில் பொறுப்பேற்றோம், எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என, மக்களுக்கு தற்போது என்ன தேவை என்பது பற்றி எல்லாம் இந்த ஐதே.மு. அரசுக்குத் தெரியவில்லை. தேர்தலும் கிட்டுகிறதுஎன்று மக்கள் நினைத்ததையும் இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் ரணில் இருந்ததோ வானத்தில் அவரது அரசாங்கமும் கட்சிக்காரரும் வானில் சிறகடித்துப்பறந்தனர். ஆயினும் மக்கள் நிலையாக மண்ணில் காலூன்றி இருந்தனர். தற்போது ரணில் வானிலிருந்து பூமியில் விழுந்துவிட்டார். அன்று ஜோன் கொத்தலாவலையின் அரசுக்கும் இதே கதியே ஏற்பட்டது. பூமியில் கால் படுமட்டும் தாம் விழுந்து விட்டோம் என்று தெரியவில்லை. ஜோன் கொத்தலாவல சிறந்த நிர்வாகிதான். இலங்கையை சிறிய இங்கிலாந்தாக மாற்ற அவர் அன்று கனவு கண்டார். அதன் காரணமாக அவர் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்தார். உலக நாடுகள் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதனால் இலங்கை என்றொரு நாடு இருப்பதாக உலக நாடுகளுக்குக் காட்டி அபிவிருத்திப் பணிகளுக்கென வெளிநாட்டு நன்கொடைகளைப் பெற அவர் செய்யாதது ஒன்றும் இல்லை. "பெங்டுங்" மாநாட்டில் கம்யூனிஸ்ட் வாதத்தை தாக்கி அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நன் மதிப்பைப் பெற்று இலங்கையை இங்கிலாந்தாக மாற்ற நினைத்தார். அவ்வாறு நினைத்தவருக்கு பிரதமர் பதவியும் போய் அரசாங்கத்தையும் இழந்தார். அது ஏன்?

வேறொன்றும் இல்லை. அவரும் அவரது அரசும் பூமியில் காலூன்றி நின்ற மக்களுக்குத் தெரியா விதத்தில் வானில் சிறகடித்துத் திரிந்தமையே. அதனால் நன்மையடைந்தது எதிர்க்கட்சியே. அதனால் எதிர்கட்சி மக்களை கிளர்ந்தெழச் செய்தது அது எவ்வாறாயின் ஜோன் கொத்தலாவலை கழுத்துப்பட்டி(Tie) அணிந்து கொண்டு உலகை சுற்றித்திரிந்தவண்ணமும் இலங்கையில் களியாட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டும், நாட்டின் கலாச்சாரம் பற்றியோ, தேசியம் பற்றியோ சிந்திக்காமல் நாட்டை ஏகாதிபத்திய வாதிகளின் இருப்பிடமாக்கித்திரிவதாகவும் மக்களுக்கு உணர்த்தியதன் மூலம் மக்கள் திசைதிருப்பப்பட்டனர். அது மட்டுமன்றி சிங்களவர்க்கும், தமிழர்க்கும் சம அந்தஸ்து வழங்குவது பற்றி கொத்தலாவலை அறிவித்ததை எதிர்க்கட்சிகள் திரிபுபடுத்தி சிங்களவரை ... தமிழும் ஆங்கிலேயரும் நாட்டை பகிர்ந்து கொள்ள சூழ்ச்சி நடைபெறுவதாக அறிவித்தது. அந்தக்கட்டுக் கதையை பொய்யென நிருபித்து மக்களிடம் உணர்த்த எதுவித நடவடிக்கையையும் கொத்தலாவல எடுக்கவில்லை.

உப்புள் ஜோசப் பர்ணாந்து
(லங்காதீப)
மொழியாக்கம் : வடிவேல்

இன்றும் ரணிலின் நிலைப்பாடும் அவ்வாறே காணப்பட்டது. மக்கள் முட்டாள்கள் அல்ல நன்கு சிந்தித்து வாக்களிப்பர் என அன்று சேர் ஜோன் கொத்தலாவல நினைத்த மாதிரியே ரணிலும் எண்ணியிருந்தார். அன்று எதிர்க்கட்சி அவரால் நன்மையடைந்தது போன்றே தற்போதும் எதிர்க்கட்சி நன்மையடைந்துள்ளது.

" சமாதானத்தைக் காட்டினால் போதும்" " உலகமே எம் பக்கம் இருப்பதாகக் காட்டிக் கொண்டால் போதும்" வற்வரி பற்றி சில அறிவித்தல்களை விட்டால் எதிர்ப்பு நின்று விடும் என்றெல்லாம் ரணில் மனக்கோட்டை கட்டியிருப்பார்.

இந்நாட்டில் இருந்தாற் போல் திடீரென பொதுத் தேர்தல் வந்து விடும். 1994ல் பொ.ஐ.முன்னணி ஆட்சியமைத்தது ஐ.தே.க. வினரின் வாக்குகள் குறைந்தபோது. 2001ம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வந்தது பொ.ஐ.முன்னணிக்கு வாக்குகள் குறைந்ததால். 2004ம் ஆண்டு ஐ.தே.கட்சிக்கு வாக்குகள் குறைந்ததால் ஐ.ம.சு.மு ஆட்சிக்கு வந்துள்ளது. அதிலிருந்து 1994 தொடக்கம் 2004வரை வாக்காளர்கள் மாறிமாறி வாக்களித்துள்ளமை தெரிகிறது. அதற்குக் காரணம் ஒருகட்சி அடைந்திருக்கும் அதாவது அது மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கே. இந்த செல்வாக்கை எதிர்க்கட்சியும் மக்களிடம் எதிர்பார்க்கும். ஆளும்கட்சியும் எதிர்பார்க்கும். ஆகவே ஆளும்கட்சி தனது செல்வாக்கை தற்காத்துக்கொள்ள வேண்டியிருப்பின் அது மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்தல் வேண்டும். அதற்கு உதவியளிப்பவை ஊடகங்கள். ஆயினும் ஐ.தே.க அரசு பதவியிலிருக்கும் வேளை ஊடகங்கள் ஐ.தே.க பதிவியிலிருப்பதாக நினைத்திருக்கவில்லை காரணம் அவ்வரசு ஊடகங்கள் பற்றி சிந்திக்காமையே.

> "சமாதானத்தைக் காட்டினால் போதும்" "உலகமே எம் பக்கம் இருப்பதாகக் காட்டிக் கொண்டால் போதும்" வற்வரி பற்றி சில அறிவித்தல்களை விட்டால் எதிர்ப்பு நின்று விடும் என்றெல்லாம் ரணில் மனக்கோட்டை கட்டியிருப்பார்.

ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள் கொலைகள் பற்றியதும் ரணிலும் அமைச்சர்களும் வெளிநாடு செல்வது பற்றியும் விலையேற்றம், வேலை நிறுத்தம் பற்றிய செய்திகளேயே அடிக்கடி பரப்பின. இதனால் ரணிலின் ஐ.தே.க.மௌனம் சாதிக்கவேண்டியதாயிற்று "என்ன இந்த சமாதானம்" சமாதானத்தினால் மிச்சம் பிடித்த நிதி எங்கே? என்றெல்லாம் கேள்விகள் எழும்பின எரிபொருள் விலையேற்றம், மின்சாரக் கட்டண உயர்வு வேலை நிறுத்தம் இவையெல்லாம் ஏன்? இவைபொருளாதாரப் பிரச்சினைகள் என்றெல்லாம் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. இந்த நிலையும் உண்மையான தாகவே காணப்பட்டன.

ஐ.தே. கட்சி ஆதரவாளர்கள் கூட இதனால் பாதிக்கப்பட்டார்கள். எனவே கட்சிக்காரர்களே விரக்தியடையும் நிலைக்கு அரசாங்கம் ஆட்சி செய்தது என்பது வெளிப்படையாக விளங்கியது.

கடந்த காலங்களிலும் தேர்தலில் தோல்வி கண்ட ஐ.தே.க. மக்களின் ஆதரவைப் பெற்று 2001ம் ஆண்டு வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது அவ்வாறு ஆட்சியமைக்க ஆதரவளித்த மக்களை அது கவனியாது விட்டு காரியம் முடிந்தும் காலை வாரிவிடுதல் போன்றதொரு செயலைச் செய்தது.

உண்மையில் ஐ.தே. கட்சி மீண்டும் ஒரு தேர்தலில் வெற்றிபெற , வேண்டுமாயின் ரணிலின் தலைமைத்துவம் இன்றியமையாததாகும் காரணம் வெளியில் பெறும் ஆதரவை விட பாராளுமன்றத்தினுள்ளேயே அவருக்கு ஆதரவு அதிகமாகிறது. ரணிலைப் போன்ற நிர்வாகியும் இல்லை. தனது கட்சியை புனரமைப்பு செய்து பலப்படுத்த அவருக்கு தேவையேற்பட்டிருக்கிறது. அதனை பின்னடிக்காமல் உடனடியாக அவர் செயல்பட வேண்டும். காலநேரம் பார்க்கக்கூடாது பாராளுமன்றத்தினுள் பெரும்பான்மை கிடையாது. இன்னும் இரண்டு வருடங்களில் சனாதிபதித் தேர்தலும் நடைபெறவிருக்கிறது.

சுருங்கக்கூறின் இது கொக்கின் காலம்- சந்திரிக்காவின் காலம். 2001 -2004 நரியின் காலமாக இருந்தது ஐ.தே.முன்னணி ஆட்சிக் காலத்தில் நிறைவேற்று அதிகார முறையை சாட்டுவைத்து சந்திரிகா ஐ.தே.மு. அரசை நிலை குலையவைத்து அரசை வீழ்த்தினார். அதேபோல தற்போது ரணிலுக்கு பாராளுமன்றப் பெரும்பான்மையைச் சுட்டிக்காட்டி கூட்டணி அரசை அச்சுறுத்திக் கொண்டு அல்லாடவைத்து தருணம் பார்த்து வீழ்த்த முடியும். அதோடு கொக்கின் காலமும் முடிவுக்கு வரும் பிறகு ரணிலின் அல்லது நரியின் காலமும் உதயமாகும்.

## கடலுணவு உற்பத்திகளை சந்தைப்படுத்த கடற்தொழில் கூ.ச.சம்மேளனம் உதவிகோரல்

(யாழ்ப்பாணம்)

கடலுணவு உற்பத்திகளைச் சந்தைப்படுத்தக்கூடிய அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும் என யாழ். மாவட்டகடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சம்மேளனம் உலகவங்கிப்பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஏராளமான கடலுணவுகள் காலத்திற்குக் காலம் பிடிக்கப்பட்டு வருகின்ற போதும், அவற்றைப்பதனிட்டுச் சந்தைப்படுத்துவதற்குப் போதியளவு ஐஸ் கட்டிகள் மற்றும் உடனடிச்சந்தைப் படுத்தல் வசதிகள் என்பன காணப் படவில்லை. இந்நெருக்கடி நிலைமைகள் தோன்றுவதற்கு இராணுவ அதிஉயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல ஐஸ்கட்டித் தொழிற்சாலைகளும், கடலுணவுத்தொழிற்சாலைகளும் முடக்கி வைக்கப்பட்டுள்ளமையே காரணம்.

இவற்றால் யாழ். குடாநாட்டு மீனவர்கள் தாம்பிடிக்கும் கடலுணவுகளை பதப்படுத்தி ஏற்றுமதி செய்து போதியளவுலாபத்தை ஈட்டமுடியாத நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனைச் சுட்டிக்காட்டியே கடற்தொழிலாளர் சங்கச்சம்மேளன உறுப்பினர்கள் உலக வங்கிப்பிரதிநிதிகளுடன் யாழ்மாவட்டக் கடற்தொழில் திணைக்களத்தில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர். (33)

## பனை,தென்னை வளத்தை மேம்படுத்த நிதியுதவி

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்தகால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால்பாதிக்கப்பட்ட பனை,தென்னைவளங்களை கட்டியெழுப்பி அவற்றின் மூலமாக பனை,தென்னைவள உற்பத்திகளை மேம்படுத்தவென 30 லட்சம் ரூபாவை யாழ்.அரச செயலகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்தகாலத்தில் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஆக்கிமிப்பு நடவடிக்கைகளால் ஏராளமான பனை, தென்னை வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதில் தென்மராட்சிப் பிரதேசமே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பனை, தென்னை வளங்களுடான வருமானங்களை நம்பி வாழும் இப்பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்திற்கொண்டு தென்மராட்சிப் பிரதேசத்தில் பனை தென்னை வளங்களைக் கட்டியெழுப்பி பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியைப் பயன்படுத்தி மேற்படி பிரதேசத்தில் கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (33)

## பாராளுமன்றத் தேர்தலுக்காக 700 மில்லியன் ரூபா செலவு

ஏப்பிரல் 2ம்.ஆம் திகதி நடைபெற்ற 13வது பாராளுமன்ற பொதுத் தேர்தலின் செலவினம் 700 மில்லியன் ரூபா என்று தேர்தல் திணைக்களம் மதிப்பிட்டுள்ளது.

உத்தியோக பூர்வமாக இச் செலவினம் மதிப்பீடு செய்யப்படாத போதிலும் தேர்தல் செலவீனம் 700 மில்லியன் ரூபா என்று செலவுத் தலைப்புக்களின் மூலம் தெரியவருவதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எவ்வாறாயினும் பொதுத் தேர்தலின் செலவினம் குறித்து ஜூலை மாத இறுதியில் உத்தியோக பூர்வ தகவலை வெளியிடமுடியும் என்று தேர்தல் செயலக பேச்சாளர் கூறியுள்ளார்.

## முதலாம் தவணை முடிந்த பின்னரும் பாடநூல்கள் முழுமையாக எட்டவில்லை

### - கல்வித் திணைக்கள அதிகாரிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான பாடநூல்கள் இன்னமும் முழுமையாக வந்துசேரவில்லை என கல்வித்திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொருமுறையும் முதலாம் தவணை கல்விப்பாடத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்ற காலத்திற்கு முன்பதாகவே இதுவரை காலமும் பாடநூல்கள் அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுவந்தன. ஆனால் இம்முறை முதலாம் தவணைப்பரீட்சைகள் நிறைவு பெற்றிருக்கின்றபோதும் இந்நூல்கள் முழுமையாக அனுப்பிவைக்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள் தமக்குரிய இலவசப் பாடநூல்களை பெறமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வில்லையெனவும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# அரசியலமைப்பு சபையொன்றை உருவாக்கி நிறைவேற்று அதிகாரத்தை அகற்ற முயற்சி

## -பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படலாம்

**நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை மாற்றி பிரதமருக்கு அதிகாரம் வழங்கும் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு ஐ.ம.சு.மு.தலைமையில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

இதற்கென அரசியற்சபை ஒன்றை ஏற்படுத்தி அதன் பின்னர் அரசியலமைப்பை மாற்றுவது தொடர்பான சர்வசன வாக்கெடுப்பொன்றையும் நடத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 22ஆம் திகதி முதலாவதாக பாராளுமன்றம் கூடும் போது அரசியல் அமைப்பு சபை ஒன்றை உருவாககவும் பின்னர் அரசியலமைப்பை மாற்றும் நடவடிக்கைகளுக்காக 3 மாதங்களுக்கு பாராளுமன்றை ஒத்திப் போடவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது. இது அரசாங்கத்துக்குள் பெரும் கருத்து மோதல்களை ஏற்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே மகிந்த ராஜபக்சவை சந்திரிகா பிரதமராக்கியதாகவும் பிரதமருக்கான அதிகாரம் வழங்கும் யாப்பு முறை நடைமுறைப் படுத்தப்படும்போது ராஜபக்சவை நீக்கிவிட்டு சனாதிபதி பிரதமராக பதவியேற்கத் திட்டமிட்டிருக்கலாம் எனவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக ஐ.ம.சு. கூட்டணியின் செயலரான சுசில் பிரேமஜயந்த கருத்துத் தெரிவிக்கையில், வரும் 22ஆம் திகதிக்குப் பின்பே இது பற்றிய முடிவு தெரிய வரும் என்று கூறியுள்ளார்.

ஹெல உறுமயவின் கட்சி ஊடகப் பேச்சாளரான அத்துரலிய ரதன தேரர் கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறானதொரு அரசியலமைப்பு தேவையாயினும் அது சூழ்ச்சிகரமாக நிறைவேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தமது கட்சி ஆதரவு தெரிவிக்காது எனக்கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஐ.தே.மு. பிரதித் தலைவர் கருஜயசூரியாவிடம் பத்திரிகையாளர் வினவியபோது இது தொடர்பாக தமது கட்சி இதுவரை எந்தத் தீர்மானத்துக்கும் வர வில்லை என்றார்.

### பிரதமரின் செயலர் நியமனம்

புதிய பிரதமர் மகிந்தராஜபக்சவின் செயலாளராக லலித்வீரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனத்தினை சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க வியாழக்கிழமை வழங்கியுள்ளார்.

மறைந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் இவர் பணியாற்றியவராவார்.

# பெரும்பான்மை பலம் தொடர்பாக உயர்நீதிமன்றின் கருத்தறிய ஆவல்!

## - சனாதிபதி செயலகம் தகவல்

(கொழும்பு)

தற்போதைய அரசியலமைப்பு முறையை மாற்றுவதற்கேற்ற நடவடிக்கைகளை தெளிவுபடுத்தும் நோக்கில் உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிவதற்கு சந்திரிகா தீர்மானித்திருப்பதாக சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்முறை நடைபெற்ற தேர்தல் முடிவுகளின்படி ஐ.ம.சு.முன்னணிக்கு அரசியல் யாப்பை மாற்றக்கூடிய வகையில் வாக்குகள் கிடைத்துள்ளதா என அறிந்துகொள்வதே இதன் நோக்கமாகும். தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் அரசியலமைப்பை மாற்றுவதாக வாக்குறுதியளிக்கப்பட்டமைக்கு ஏற்ப உயர்நீதிமன்றம் இதற்குச் சார்பான கருத்துக்களை வெளியிடுமாயின் அரசியலமைப்புச் சபையை நிறுவுதல் புதிய அரசமைப்புத் தொடர்பாக சட்டமூலம் சமர்ப்பிக்க ஏதுவாக இருக்கும் என சந்திரிகா எண்ணுவதாகவும் அறியவருகிறது.



நேற்றுக் காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச்சென்று கொண்டிருந்த பாரவூர்தியொன்று பரந்தனுக்கு அண்மையாக ஏ–9 நெடுஞ்சாலையில் முன்னால் வந்த வாகனத்திற்கு இடம் கொடுக்க எத்தணிக்கையில் நெடுஞ் சாலையினை விட்டு விலகிகுடை சாய்ந்துள்ளதனைப் படத்தில் காணலாம். (படம்: சோதி)

# மாற்று அரசியல் கருத்துள்ளவர்களுக்கு எதிராக ஐ.ம.சு.மு. வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது

## -ஐ.தே.க.பொதுச் செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மாற்று அரசியல் கருத்துள்ளவர்களுக்கு எதிராக வன்முறைகளை கட்டவிழ்த்துவிடும் மனிதாபிமான மற்றசெயற்திட்டம் ஒன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னெடுத்திருப்பதாக ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் செனரத் கப்புக் கொட்டுவ குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களை ஆதரிக்கும் மனிதாபிமாணம் மிக்க அரசாங்கம் ஒன்றை அமைப்பதாகக் கூறிக்கொண்டு அதிகாரத்திற்கு வந்த கூட்டமைப்பு மனிதாபிமானத்திற்கு பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

தற்போதைக்கு பல்வேறு தேர்தல் தொகுதிகளில் மட்டுமன்றி அரச நிறுவனங்களிலும் அதேபோன்று திணைக்களங்களிலும் இவ்வாறான சனநாயக விரோதச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன. தமது கடமைக்கு திரும்புவதற்கு இடமளிக்காமை பலவந்தப்படுத்துதல் அதிகார துஷ்பிரயோகம், சொத்துச்சேதம் மற்றும் தாக்குதல் நடத்துதல் போன்ற பல்வேறு செயல்கள் இடம் பெறுகின்றன.

இதனை வன்மையாக எதிர்க்கும் நாம் நீதியையும் அமைதியையும் பாதுகாக்கும்படி பொலிஸ் மற்றும் பாதுகாப்பு தரப்பினை கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

# கேணல் சங்கர் நினைவாக கள்ளப்பாட்டில் முன்பள்ளி திறப்பு

முல்லைத்தீவு கள்ளப்பாட்டு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கேணல் சங்கர்/முகிலன் முன்பள்ளி திறப்பு விழா அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. மங்கள விளக்கினை கள்ளப்பாடு ஆதிவைரவர் க.தொ.கூ.ச.உறுப்பினர் குணம் ஏற்றிவைக்க, முன்பள்ளி கட்டடத்தை கள்ளப்பாடு ஆதிவைரவர் ஆயலகுருக்கள் நாடாவினை வெட்டி திறந்து வைத்தார்.

சிறப்புரைகளை முல்லை மக்கள், நலன்புரிச்சங்க இணைப்பாளர் நகுலன்,முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர்சங்கத்தின் உறுப்பினர் யோகன் ஆகியோர் நிகழ்த்தினர்கள் இறுதியாக நன்றியுரையினை முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர் சகாயராணி நிகழ்த்தினார் பெற்றோர்கள், மாணவர்கள்,நிறுவனப்பணியாளர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (20)

# யாழ்.சிறைச்சாலை பாதுகாப்பு இராணுவ வசம் கைதிகளின் பாதுகாப்பு குறித்து அச்சம் !

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையை இராணுவம் முற்றுமுழுதாக பொறுப்பேற்றுள்ளதாக தெரியவருகிறது. அண்மையில் மேற்படி சிறைச்சாலையில் இருந்து ஒருகைதி தப்பி ஓடியுள்ளதுடன் சிலர் தப்பி ஓட முயற்சிகளையும் மேற்கொண்டனர். இதற்கு சிறைச்சாலை காவலர்களது பற்றாக்குறையும், திடகாத்திரம் இன்மையுமே காரணம் எனக்காட்டி யாழ்.சிறைச்சாலையை கடந்த சனிக்கிழமை முதல் இராணுவத்தினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்நடவடிக்கையானது கைதிகளது மனநிலையைப் பாதிப்பதாகவும், உரிமை மீறல்களையும், சித்திரவதைகளையும் மேற்கொள்ளக் கூடிய அபாயம் தோன்றியிருப்பதாக யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

# ஜப்பானிய நிதியுதவியுடன் அம்புலன்ஸ் வண்டிகள்

ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் அதனைஅண்டி உள்ள பிரதேசங்களிலும் உள்ளமருத்துவமனைகளை மேம்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் அதனை அண்டி உள்ள பகுதிகளிலுமுள்ள வைத்திய சாலைகளுக்கு எட்டு அவசர நோயாளிகள் காவுவண்டிகளும், மூன்று பிக்கப் வாகனங்களும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அதிகாரிகளைத் தடுத்துவைத்து பட்டதாரிகள் போராட்டம்

வடமத்திய மாகாணத்தின் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் குழு அனுராதபுரம் செயலகத்தின் (கச்சேரி) அரசசேவை ஆணைக்குழு அலுவலகத்திற்குள் திடீரென நுழைந்து அங்குள்ள கதவுகளை மூடி அதிகாரிகளையும், ஊழியர்களையும் வெளியே செல்லவிடாது தடுத்த வைத்தசம்பவம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

வடமத்திய மாகாண அரச சேவையில் உள்ளவெற்றிடங்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை வேலையற்ற பட்டதாரிகளைக் கொண்டு நிரப்பவுள்ளதாக கூறப்பட்டது. எனினும் இதற்கான நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை. என்பதனாலேயே பட்டதாரிகள் குழுஇவ்வாறு அதிரடி நடவடிக்கையில் இறங்கியதாக கூறப்படுகின்றது.

# மாரடைப்பை கண்டறிய கணனித் தொழில்நுட்பம்

மாரடைப்பு அல்லது வாத நோய் ஏற்படுவதற்கான அச்சுறுத்தலை முன் கூட்டியே அறிந்து கொள்வதற்கான கணனி தொழில் நுட்பம் ஒன்றை ஆய்வாளர்கள் தயாரித்துள்ளார்கள்.

"ஐரோப்பிய இருதய சமூகம்" என்ற ஆய்வு அமைப்பே "ஹார்ட்ஸ் கோர்" என்ற இந்த கணனி தொழில்நுட்பத்தை தயாரித்துள்ளது.

ஒருவரது பால்வேறுபாடு,வயது வேறுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் உயர் குருதியமுக்கம், கொலஸ்ரோல் அறை, புகைத்தல் காரணமான பக்கவிளைவுகள் என்பவற்றை அளவிடுவதன்மூலம் மாரடைப்பு அல்லது வாதம் ஏற்படுத்துவதற்கான அச்சுறுத்தல் அறியப்படுகின்றது.

"ஹார்ட்ஸ்கோர்" என்பது பாரதூரமான நோய்களுக்கான அச்சுறுத்தல்களை அறிந்து கொள்வதற்கான மிகச் சிறந்த கருவி என்றும் ஐரோப்பிய இருதய சமூகத்தின் தலைவி பேராசிரியர் ஜியனி. பியரோ பனான் கூறியுள்ளார். 2 இலட்சத்து 10,ஆயிரம் நோயாளிகளில் மேற்கொள்ளப்பட்ட 12விதமான ஆய்வுகளிலிருந்தே இந்த முடிவு பெறப்பட்டுள்ளது.

# ஆதவன் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா



(அலுவலகசெய்தியாளர்)

ஆதவன் முன்பள்ளியின் 9ம் ஆண்டு வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி கனகபுரம் ஆதவன் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

முன்பள்ளி முதல்வர் சி.மகேந்திரன் தலைமையில் பிப.1.00 மணிக்கு நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் மங்கள விளக்கினை கிளி.வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம்,பெற்றார் ஆசிரியர் சங்க செயலர் அரவிந்திரன் ஏற்றிவைக்க, தமிழீழத்தேசியக்கொடியினை போராளி பூவரசன் ஏற்றிவைத்தார்.

கிளி.வலயக்கல்விப்பணிப்பாளரின் ஆசியுரையினையடுத்து முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் சி.சிவநாதன், கனகபுரம் கிராம சேவை அலுவலர் சு.பசுபதிப்பிள்ளை, கனகபுரம் கிராம முன்னேற்றச்சங்க தலைவர் அ.கனகரத்தினம், கல்வி மேம்பாட்டு நிலைய முன்பள்ளி இணைப்பாளர் யோ.நிலா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற சிறார்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# யாழ்.தீவகக் கடற்தொழிலாளர்கள்மீது கடற்படையினரின் கெடுபிடி அதிகரிப்பு!

## தடுத்து நிறுத்த மீனவர்கள் நிர்ப்பந்தம்

**யாழ்.தீவகக் கடற்தொழிலாளர்கள் மீது கடற்படையினர் திணித்து வரும் பாஸ் நடைமுறைக் கெடுபிடிகளை நீக்கக்கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

கடந்தகால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடற்படையினர் தமது பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு அறிமுகப் படுத்திய பாஸ் நடைமுறையைஅரசு- புலிகளுக்கிடையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் அவர்கள் கைவிடவில்லை. இதனால் குடா நாட்டு மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் இலக்காகி வருகின்றனர்.

இவ்வாறான கெடுபிடிகள் ஐக்கியமக்கள் சுதந்திர முனன்ணி ஆட்சிக்குவந்த பின்னர் தான் மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் யாழ்.தீவகப்பகுதி மீனவர்கள் பல இடர்களையும் அனுபவித்து வருகின்றனர். இந்நிலை தமது வாழ்வியல் உரிமைகளை மீறுவதாக அமைவதாகச் சுட்டிக்காட்டியே பாதிக்கப்பட்ட மீனவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (33)

# இந்திய மீனவரின் அடாவடித்தனங்களையிட்டு தீவகக் கடற்தொழிலாளர் சங்கம் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகக் கடற்பரப்பில் இந்திய மீன்பிடி ரோளர்களின் அத்து மீறல்களும் அடாவடித்தனங்களும் தொடர்வதாக தீவகக் கடற் தொழிலாளர் சங்கம் தெரிவித்திருக்கிறது.

அண்மைக்காலமாக இல்லாதிருந்த இவ்வாறான இந்திய ரோளர்களின் அத்து மீறல்களும் அடாவடித்தனங்களும் மீண்டும் ஆரம்பித்திருப்பதாகவும், இவ்வாறு அத்து மீறி நுழையும் இந்திய மீனவர்கள் யாழ். தீவக மீனவர்கள் கடலில் வீசப்பட்டிருக்கும் வலைகளை அபகரித்தும், சேதப்படுத்தியும் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான இந்திய மீனவர்களின் அத்து மீறல்களுக்கு சிறிலங்கா கடற்படையினரின் அசமந்தப் போக்கே காரணம் எனவும் தீவகக் கடற்தொழிலாளர் சங்கம் மேலும் சுட்டிக்காட்டுகிறது. (33)

# பொதுச்சுகாதார சேவைகளை வலுப்படுத்த யுனிசெவ் உதவிகள் தொடரவலியுறுத்து

(வடமராட்சி)

யாழ். குடா நாட்டின் பொது சுகாதார சேவைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு யுனிசெவ் தொடர்ந்தும் உதவிகளை நல்க வேண்டுமென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவபாதசுந்தரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யப்பானிய அரசின் நிதி உதவியின் கீழ் யுனிசெப் அமைப்பினால், யாழ்.மாவட்டப்பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வைபவரீதியாக கையளிக்கப்பட்டது. தாய்- சேய் நலத்திட்டத்தின் கீழ் வெளிக்களப்பணிகளை மேற்கொள்வதற்கான யப்பானிய அரசின் நிதி உதவியின் கீழ் யுனிசெவ் அமைப்பு 46 மோட்டார் சைக்கிள்களை வழங்க முன்வந்திருந்தது. அவற்றில் முதல் கட்டமாகவே 39 மோட்டார் சைக்கிள்கள் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டது. யாழ். வைத்தியசாலை வீதியிலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம் பெற்றது. (27)

# ஏ-9 நெடுஞ்சாலையில் சீரற்ற புனரமைப்பு போக்குவரத்து மேற்கொள்வதில் அபாயம்!

(அலுவலக செய்தியாளர்)

முகமாலை முதல் புளியங்குளம் வரையிலான ஏ-9 நெடுஞ்சாலையின் வீதிப்புனரமைப்புப் பணிகள் பல இடங்களில் சீரின்மைகாரணமாக பலத்த அச்சத்துடனேயே வாகனங்களை செலுத்திச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதென வாகன ஓட்டிகள் பலர் தங்கள் ஆதங்கத்தினை தெரிவித்துள்ளனர்.

பார்வைக்குவீதிகள் சீராக புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பெற்றிருப்பதுபோன்று காணப்பட்டிருப்பினும் இவ் வீதியின் பல இடங்களிலும் வீதியின் மத்திய பகுதி மற்றும் கரையோரப் பகுதிகளில் பாரிய ஏற்றம் இறக்கங்கள் உள்ளமையினால் இப்பகுதிகளில் வாகன விபத்துக்கள் ஏற்படக்கூடிய ஏது நிலை தோன்றியுள்ளதனை அவதானிக்கமுடிகின்றது.

மற்றும் பல இடங்களில் கருங்கற்களினால் வீதிகள் செப்பனிடப்பெற்றுள்ளபொழுதிலும் மேற்படி கருங்கற்களை இறுக்கமாகப் பற்றிக் கொள்ளும்வகையில் தார்ஊற்றப்படாதமையின் காரணமாக இக்கருங்கற்கள் வீதியால் செல்லும் வாகன சக்கரங்களில் சிக்கி தெறிக்கும் பொழுது அப்பகுதியால் பயணிக்கும் பயணிகளை காயப்படுத்துவதுடன் பல வாகனங்களின் கண்ணாடிகளையும் உடைத்துள்ளமை போன்ற சம்பவங்கள் இப்பகுதிகளில் இடம் பெற்றுள்ளது. இப்படியான பகுதிகள் குறிப்பாக பரந்தன் சந்திமுதல் முகமாலை வரையிலான ஏ-9 நெடுஞ்சாலையின் பல இடங்களில் காணப்படுவதால் இப்பகுதிகளில் வாகனங்களை செலுத்திச் செல்கையில் வாகன ஓட்டிகளின் கட்டுப்பாட்டினை மீறி வாகனங்கள் இழுத்துச் செல்லப்படுவதும், விபத்துக்கள் ஏற்படுவதும் தற்போது இடம்பெற்று வருவனவாக அமைந்துள்ளது. பாரஊர்தி குடைசாய்ந்த நேற்றைய சம்பவமும் இதேபோன்ற பகுதியிலேயே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்படியான பகுதிகளை உடன் சீர்செய்யத்தவறும்பட்சத்தில் இப்பகுதிகளில் வீதிவிபத்துக்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடும் (சோ)

# ஹெல உறுமயவின் உறுப்பினர்களுக்கு பாராளுமன்றத்தில் விசேட வசதிகள்!

(கொழும்பு)

ஹெல உறுமய கட்சியின் சார்பில் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பௌத்த பிக்குமார்களுக்கென பாராளுமன்றத்திற்குள் தனியான உணவுச்சாலையொன்றும், தனியான ஓய்வறையொன்றும் அமைத்துக்கொடுப்பதற்கும் வேறுபலவசதிகள் செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக பாராளுமன்ற உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஹெல உறுமய கட்சியின் சார்பில் இம்முறை பௌத்த பிக்குமார்கள் ஒன்பது பேர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உணவுச்சாலையில் வேறொரு பிரிவு தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது.அதேபோன்று இவர்களுக்கு முற்பகல் 11.30 மணிக்கு முன்னர் உணவைசமைத்து வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஹெல உறுமய கட்சியின் தலைவராகி விளங்கும் பௌத்த மதகுருவுக்கு எதிர்க்கட்சியின் முன் வரிசையில் ஆசனம் ஒதுக்கிக் கொடுக்கப்படவுள்ளதுடன் ஏனையோருக்கு ஹெல உறுமய கட்சியின் தலைவர் குறிப்பிடுவது போன்று பின்வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

# பாதாள உலகத்தவர் மூவர் பொலிசாரிடம் சிக்கினர்

(கொழும்பு)

கொழும்பு நகரில் வைத்து பாதாள உலகக்குழுவைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வான் ஒன்றில் நேற்று முன்தினம் மாலை பயணம் செய்து கொண்டிருந்த சமயம் விசேட புலனாய்வுத் துறையினர் இந்த மூவரையும் கைது செய்ததாக குற்றப்புலனாய்வுத் துறையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத்லுணுகொட தெரிவித்துள்ளார்.மேற்படி கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பாரிய குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்பதுடன் பொலிசாரினால் தேடப்பட்டு வந்தவர்கள் என்பதும் ஆரம்ப விசாரணையின் போது தெரியவந்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# ஆட்டோ பள்ளத்தில் வீழ்ந்தது சாரதி உட்பட மூவர் பலி!

கண்டி மெனிகின்ன என்ற பிரதேசத்தில் நேற்று அதிகாலை முச்சக்கர வண்டி ஒன்று பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட மூவர் மரணமாகியுள்ளனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று அதிகாலை மெனிகின்ன பிரதேசத்தில் இருந்து மடவளையை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த முச்சக்கரவண்டி பளன என்னுமிடத்திலேயே இந்தவிபத்துக்குள்ளானது.

# உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பல்

மே மாதம் 6ம்திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் உரியவர்களது முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதம் 6ம் திகதி முதல் 31ம் திகதி வரை நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு 240,733 பாடசாலை பரீட்சார்த்திகளும் ,198,958 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர். இப்பரீட்சை 1750 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.


ஜனவி சாரதி பயிற்சிப் பாடசாலை

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஜனவி சாரதி பயிற்சிப்பாடசாலை மீண்டும் வன்னி வாழ் மக்களுக்காக எதிர்வரும் 14. 04. 2004 இல் இருந்து தனது சேவையை வழங்கவுள்ளது. எனவே பதிவுகளுக்கு முந்துங்கள். ஏற்கனவே எம்முடன் தொடர்பு கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முன்பு பயிற்சி பெற்றவர்கள் தமது பதிவுகளைப் புதிப்பித்து பயிற்சிகளைத் தொடரலாம்.

ஜனவி லேணர்ஸ்,
72,சேவியர் கடைச்சந்தி,
கிளிநொச்சி.

(4432)



மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

தமிழீழ வைப்பகத்தின்

வியத்தகு வெகுமதிகள்

அமுதம் சிறார் தேட்டக்கணக்கில் 14.04.2004 ஆம் நாளில் உரூபா 10,000/= இற்கு மேற்பட்ட தொகையினை வைப்புச் செய்யும் சிறார்களுக்கு,



- வைப்புத் தொகையின் 10% உபகாரப்பணம் (BONUS)
- மேலும் பெறுமதிமிக்க விருப்பத் தெரிவுப் பரிசுப்பொதிகள்







தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சீ-936)



## சிந்தனைக்கு

இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, தாங்கொணாத்துன்பத்தின் பரிசாகப் பெறுவதுதான் சுதந்திரம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12 -04-2004

## ஆரம்பமே இழுபறி!

பெரும் இழுபறியின் பின்னர் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சரவை நேற்று முன்தினம் மாலை பதவி ஏற்றுள்ளது. அதிலும் ஐ.ம.சு. முன்னணியின் முக்கிய பங்காளர்களான ஜே.வி.பி.யின் அமைச்சர்கள் இன்னமும் பதவி ஏற்கவில்லை.

தேர்தல் முடிவுகள் வெளிவந்துகொண்டிருக்கையிலேயே ஐ.ம.சு.முன்னணியினர் அரசாங்கம் அமைப்பது பற்றிப் பேசத் தொடங்கியிருப்பினும், பிரதமர் ஒருவரை நியமிப்பதில் இருந்து அமைச்சரவை பொறுப்பேற்பது வரையில் இழுபறியும் காலதாமதமும் ஏற்படுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை.

முதலில் பிரதமராக லக்ஷ்மன் கதிர்காமர் பதவி ஏற்பர் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தபோதும், பின்னர் சுதந்திரக்கட்சிக்குள் ஏற்பட்ட இழுபறி காரணமாக மகிந்தராஜபக்ச பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அது கூட்டணிக்குள் சற்று சலசலப்பை ஏற்படுத்தும் ஒன்றாகவே இருந்தது. ஏனெனில், ஜே.வி.பி.யும் தனது நலன்கருதி கதிர்காமரைப் பிரதமராக்கும் முயற்சியில் ஆர்வம் கொண்டிருந்தது.

ஆயினும் இருநாள் தாமதத்தின் பின்னர் மகிந்தராஜபக்ச பிரதமராகப் பதவி ஏற்றுக்கொண்டாலும், அமைச்சர்களை நியமனம் செய்வதில் இதனைவிடக் காலதாமதமும் இழுபறிநிலையும் ஏற்பட்டது. நாளை, நாளை என மூன்று தினங்களுக்கு மேல் பிற்போடப்பட்டது மட்டுமல்ல அமைச்சரவை பதவி ஏற்ற நாளில் கூட பலமணித்தியாலங்கள் தாமதமாகவே பெறுப்பேற்றுக்கொண்டது.

இவ்வாறான குழப்பத்திற்கு அமைச்சுக்கள் ஒதுக்கீடு மற்றும் பதவிப்போட்டிகள் என்பன காரணமாக இருந்துள்ளன. எடுத்துக் காட்டாக சிறிலங்காவின் முன்னாள் கிரிக்கெட் கப்டன் அர்சுனரணதுங்க தமக்கு விளையாட்டுத்துறை அமைச்சைத் தரவில்லை என்ற காரணத்தினால் பதவிஏற்பு வைபவத்தில் இருந்து வெளியேறியிருந்தார்.

இதேவேளை, ஜே.வி.பி: மகாவலி அமைச்சையும் கோரியதினால் அமைச்சரவை அமைப்பதில் முட்டுக்கட்டை ஏற்பட்டது. நேற்றுமுன்தினம் அமைச்சரவை பதவிஏற்பு நிகழ்வு பல மணிநேரம் பிற்போடப்பட்டமைக்கு இதுவே முக்கிய காரணமாகும் இறுதியில் அவ் அமைச்சு யாருக்கும் ஒதுக்கப்படாத நிலையில் மாலை வேளையில் அமைச்சர்கள் பதவி ஏற்பு வைபவம் இடம்பெற்றது. இதன் விளைவாக ஜே.வி.பி. அமைச்சர்களும் அமைச்சுப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தவகையில் பல இழுபறிகள் முரண்பாடுகள் என்பனவற்றின் மத்தியில் ஐ.ம.சு.முன்னணியின் அமைச்சரவை பொறுப்பேற்றுள்ளதாயினும், இன்னமும் அவ் அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாகவே உள்ளது. அதாவது ஐ.ம.சு.முன்னணி பெற்றுக்கொண்ட 105 ஆசனங்களும் ஈ.பி.டி.பி.யின் ஒரு ஆசனத்தையும் தவிர வேறு எவையும்இல்லை. அதாவது பாராளுமன்ற ஆசனத்தைக் கொண்ட ஏனைய கட்சிகள் எவையும் இன்னமும் ஐ.ம.சு.மு. அரசாங்கத்தில் பங்கேற்கத் தயாராக இல்லை.

ஜாதிகஹெல உறுமய கட்சியினர் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்திருப்பினும், அவர்கள் அரசாங்கத்தில் பங்கேற்கும் நிலையில் இல்லை. மாறாக அரசாங்கத்திற்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதற்குப் பல நிபந்தனைகளையும் விதித்துள்ளது. ஜாதிக ஹெல உறுமயவைப் பொறுத்து சிறுபான்மைக் கட்சிகள் அரசாங்கத்தைக் கவிழ்க்கவோ, அச்சுறுத்தவோ அனுமதிக்கப்போவதில்லை என்பதே அதன் நிலைப்பாடாகும்.

ஆனால், சிக்கலானவேளைகளில் ஜாதிகஹெலஉறுமய எவ்வாறு நடந்து கொள்ளும் எனக் கூறுவதற்கு இல்லை ஆகையினால், பெரும்பான்மை தேவை என்ற நிலைஏற்படும் வேளையில் எல்லாம் அரசாங்கம் அபாயங்களை எதிர்கொள்ளவதற்கான வாய்ப்புக்கள் நிரம்பவே இருப்பதற்கு வாய்ப்புண்டு. ஆகையினால், எவ்வேளையிலும் அரசாங்கம் அபாயத்தை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக்களே உண்டு.

ஆனால், இவ்வரசாங்கத்தின் ஒரேபலம் நிறைவேற்று அதிகாரத்தை சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா கொண்டுள்ளதே ஆகும். அதேவேளை இவ் அரசாங்கம் எதிர்கொள்ளவுள்ளபெரும் சவால் இனப்பிரச்சினை தொடர்பாகச் சமாதானப்பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்பதே. இதனால், ஜே.வி.பி.யும், ஜாதிகஹெல உறுமயவும் எதிர்க்கும் ஒரு விடயத்தில் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம்கூட அர்த்தமற்ற தொன்றாகிவிடும் என்பதே இன்று யதார்த்த பூர்வமான நிலையாகும்.

# எமது கொள்கைகளை சு.க வெளிப்படுத்த தவறின் உரிமைகளை வென்றெடுக்க நடவடிக்கை

### -ஜே.வி.பி.யின் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

எமது கொள்கைகளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உரிய முறையில் வெளிப்படுத்தத் தவறும் பட்சத்தில் ஜே.வி.பி.பொது மக்களின் உதவியுடன் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்ளும் என ஜே.வி.பி.தலைவர் சோமவன்சஅமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜே.வி.பியினரால் 1971 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் அப்போதைய அரசிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டபுரட்சி தொடர்பான நினைவு கூரும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சோமவன்ச அமரசிங்க மேலும் தெரிவிக்கையில்: பிழையான வழியில் முன்னெடுத்துச் செல்லப்படும் நடவடிக்கைகளை மக்களின் உதவியுடன் ஜேவிபிஎதிர்த்து தட்டிக் கேட்கும் என மேலும் அவர் கூறினார்.

# ஐ.ம.சு.முன்னணியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறக்க மறுப்பு!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர்கள் தங்களது பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளை விட்டுக்கொடுக்க மறுப்புத் தெரிவித்துள்ளார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் ரட்ணசிறிவிக்கிரம நாயக்கா, அனுருத்த ரத்வத்த ஆகியோரும் மற்றும் வீ.ஆனந்தசங்கரிக்கும் தேசியப்பட்டியலில் இடம் அளிக்கப்படவிருப்பதாக முன்னர் செய்திகள் வெளிவந்திருந்தமை தெரிந்ததே.

தற்போது தேசியப்பட்டியலில் இடம்பிடித்திருக்கும் ஏனைய உறுப்பினர்கள் இவர்களுக்கு இடமளித்து விலகமறுத்துள்ளனர் என 'ராவய' தெரிவித்துள்ளது.

இதனால் மேற்படி உறுபபினர்கள் தேசியப்பட்டியலில் இடம் பெறுவது கேள்விக் குறியாக இருப்பதாக தெரிய வருகிறது. தற்போது பட்டியலில் அங்கம் வகிப்போரை 22ம் திகதிக்கு பின்னர் ராஜினாமாச் செய்யுமாறு யாரையும் சந்திரிகா கோரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### - தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட-

# 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்க ஆராய்வு

13 ஆவது நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களில் 22பேர் தேர்தல் விதிமுறைகளை மீறியதாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் என்று தெரி விக்கப்படுகின்றது.

பொலிஸ் திணைக்களத்தில் தேர்தல் வன்முறை விசாரணைப் பிரிவு பதிவுகளின்படி கடந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 41 பேர்மீது தேர்தல் வன்முறை மற்றும் தேர்தல் விதிமுறை மீறல் குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இவர்களில் 22பேர் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளார்கள்.

இவர்களில் ஐ.ம.சு.முன்னணியைச்சேர்ந்த 12 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐ.தே.கட்சியை சேர்ந்த 8 உறுப்பினர்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்ந்த இருவரும் அடங்குவர்.

மேற்படி 22 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 6 பேருக்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் அத்து மீறி பிரவேசித்த பொலிஸ் அதிகாரிகளைத் தாக்கியமை, அச்சுறுத்தியமை, மற்றும் குழப்பம் விளைவித்தமை ஆகிய குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வது குறித்துஆராயப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# வாக்களித்த சிங்கள மக்களை மறந்து தே.பட்டியலில் சிறுபான்மையினருக்கு இடம்

### - மல்வத்த பீடாதிபதி ஐ.தே.க.மீது கண்டனம்

ஐக்கிய தேசியக்கட்சி தேசியப் பட்டியலில் உறுப்பினர்களை நியமிக்கும் போது தீர்க்கதர்சன மற்றமுறையில் செயற்பட்டுள்ளதென மல்வத்த பீடத்தின் பிரதம தேரர் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சி தமக்கு வாக்களித்த சிங்கள மக்கள் தொடர்பாக எத்தகைய கவனமும் செலுத்தாமல் சிறுபான்மை இனங்களுக்கு தேசியப்பட்டியலில் பதவிகளை வழங்கியுள்ளது. இது சிறுபான்மை மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்து அவர்களை மகிழ்விப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையென அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை ஐ.தே. கட்சியின் தலைமைத்துவத்தில் காணப்படுகின்ற திறமையின்மை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்.- நோர்வேத்தூதுவர் அரசியல் நெருக்கடி குறித்துப்பேச்சு

நோர்வே நாட்டின் தூதுவர் ஹென்ஸ் பிரெட்ஸ்கர், ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த ஜேர்மன், இத்தாலி, ஐக்கியஇராச்சியம், சுவீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் அனைவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

பாராளுமன்றத்தில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை இல்லாதநிலையில் தற்பொழுது எழுந்துள்ள அரசியல் நெருக்கடி நிலை, அரசியல் ஸ்திரத்தன்மை தொடர்பாகவே இவர்கள் கலந்துரையாடியுள்ளார்கள்.

அத்துடன் இச்சந்திப்பில் தற்போதைய சூழ்நிலையில் சமாதானப்பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் உள்ள சிக்கல்களைப்பற்றியும் விரிவாக ஆராய்ந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

அதுமட்டுமன்றி இப்பேச்சுவார்த்தைகளின் போது நாட்டில் தற்போது தோன்றியுள்ள அரசியல் நிலைகுறித்து கலந்துரையாடியதுடன் முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாட்டையும் தூதர்கள் கேட்டறிந்துகொண்டனர்.

இச்சந்திப்பு வியாழக்கிழமை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் வீட்டில் நடைபெற்றுள்ளது.

# வக்கார்யூனிஸ் ஓய்வு

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான வக்கார் யூனிஸ் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார்.



கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணி அரையிறுதி வரை முன்னேறிச் சென்று தோல்வியைத் தழுவியதால் அதன்பின் அணிக்காக அவர் விளையாடவில்லை தற்போது தொலைக்காட்சி ஒன்றில் வர்ணனையாளராகப் பணியாற்றும் அவர் இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியின் பின் ஓய்வு எடுக்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

# சிம்பாவே பயணமாகும் வீரர்கள் விபரம் அறிவிப்பு

சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள சிறிலங்கா கிரிக்கெட் அணியில் ஒருநாள் போட்டிகளில் பங்கு பற்றும் அணியில் 3புதுமுக வீரர்கள் அறி முகப்படுத்தப்படவுள்ளனர் இவர்கள் மூவரும் ஏ.அணிக்காக சிறப்பாக விளையாடியவர்களாவர். அந்தவரிசையில் 19 வயது பர்வீஸ் மஹ்ரூப், 21வயது திலின கண்டம்பி, 24 வயது ரங்கண ஹேரத் ஆகியோரே இடம் பெறுகின்றனர் இவர்களில் பர்வீஸ் மஹ்ரூப் சகல துறைஆட்டக் காரராவார்.

அணி விபரம் வருமாறு மாவன் அத்தபத்து (தலைவர்), மகேலஜயவர்தன (உபதலைவர்), சனத்ஜயசூரிய, குமார் சங்கக்கார, திலகரத்தின டில்ஷான், ரசல்அர்னல்ட், சமன் ஜயந்த, திலின கண்டம்பி, சமிந்தவாஸ், முரளிதரன், நுவன் சொய்சா, தில்ஹார பெர்னாண்டோ, உபுல் சந்தன, ரங்கன ஹேரத், நுவன் குலசேகர ஆகியோர்.

# கிழக்கில் பாரிய ஆயுதங்களுடன் புலிகள் பிரவேசித்தமைக்கு சனாதிபதியே பொறுப்பு!

## ஜாதிகஹெல உறுமய குற்றச்சாட்டு

பாரிய ஆயுதங்களுடன் கிழக்குப் பகுதியில் விடுதலைப்புலிகள் பிரவேசித்தமைக்கு போர் நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் புதிய அரசாங்கத்தின் பிரதமரும், பாதுகாப்புக்குப் பொறுப்பாகவுள்ள சனாதிபதியும் பொறுப்பேற்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கை காரணமாக கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாண நிலைமை தொடர்பில் தாம் கவனம் செலுத்தி வருவதாகவும், விடுதலைப்புலிகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதல்கள் உள்ளக பிரச்சினை என்று கூறப்பட்டு வருகிறது. எனினும் தமது கட்சி அதனை அவ்வாறு எண்ணவில்லை. அது பாரிய யுத்தம் ஒன்றுக்கான ஆரம்பம் என்றே தாம் கருதுவதாகவும் ஜாதிக ஹெல உறுமய மேலும் தெரிவித்துள்ளது. (32)

# தீவுப்பகுதியில் கடற்படையினர் மீண்டும் சோதனைக்கெடுபிடி

நாடாளுமன்ற பொதுத்தேர்தலின் பின்னர் தீவுப்பகுதிகளில் கடற்படையினரது சோதனைக்கெடுபிடிகள் என்றுமில்லாதவாறு மீண்டும் அதிகரித்து வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

குறிப்பாக யாழ். நகரிலிருந்து தீவுப் பகுதிக்கான நுழைவாயிலான அல்லைப்பிட்டி சோதனைச் சாவடிப் பகுதியிலும், அதேபோன்று ஊர்காவற்துறை கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறைப் பகுதியிலுமே கடற்படையினரின் சோதனைக் கெடுபிடிகள் தலைதூக்கியுள்ளது.

இதன் பிரகாரம் மீண்டும் பயணிகளது அடையாள அட்டைகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன் அவர்கள் எடுத்துச்செல்லும் பொதிகளும் சோதனைக்கு தற்போது உள்ளாக்கப்படுகின்றது.

இதனால் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதுடன், வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டு சோதனைக்கு உள்ளாக்கப்படுவதால் நீண்ட தாமதங்கள்ஏற்படுவதாகவும் குற்றஞ் சாட்டப்படுகின்றது. (27)

# படையினர், ஈ.பி.டி.பி.யினரின் அடாவடி கண்காணிப்புக்குழு விசாரணை ஆரம்பம்

யாழ். தீவகப்பகுதிகளில் படையினரும் ஈ.பி.டி.பி. தேசவிரோதிகளும் இணைந்து மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தம் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தின் பின்னர் தீவகப் பிரதேச மக்கள் மீதும், அங்கு அரசியல் பணிகளில் ஈடுபடும் போராளிகள் மீதும் படையினரின் துணையுடன் ஈ.பி.டி.பி.யினர் தமது கொலைமிரட்டல்களையும் அச்சுறுத்தல்களையும் விடுத்துவருகின்றனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறையினர் மற்றும் மக்கள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாகவே இவ்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கண்காணிப்புக்குழுவினரது யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் ஈ.பி.டி.பி. மற்றும் படைத்தரப்பின் மீது கண்காணிப்புக் குழுவினர் தம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (33)

# ஐ.ம.சு.மு. சபாநாயகர் வேட்பாளராக ரட்ணசிறி

13வது பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பெயரை சிபார்சு செய்ய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கூடிய கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதேவேளை ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை தேசியப்பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

# அமெரிக்க சமாதானக் குழு நாளை மறுதினம் யாழ். வருகை

அமெரிக்காவைச்சேர்ந்த சமாதான ஆய்வாளர் குழு ஒன்று நாளை மறுதினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளது.

நடைபெற்றுமுடிந்த சிறிலங்காவின் 13வது நாடாளுமன்ற பொதுத் தேர்தலின் பின் யாழ். குடாநாட்டில் நிலவும் இராணுவ அரசியல் நிலை நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இக்குழு விஜம் செய்கிறது.

இவ்வாறு விஜயம் செய்யும் இவர்கள் யாழ். குடாநாட்டின் அரச மற்றும் அரச சார்பற்ற அரசியல் பிரதிநிதிகளை சந்தித்து குடாநாட்டு நிலவரங்கள் தொடர்பாக ஆராய்வர் என தெரியவருகிறது. (33)

# இந்தியாவில் பிறந்த பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்க மன்னார் செயலகம் நடவடிக்கை

கடந்த காலங்களில் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியா அகதி முகாம்களில் வசித்து வந்தவர்களின் பிள்ளைகள் இந்தியாவில் பிறந்து தற்போது மீண்டும் மன்னாரிற்கு வருகை தந்துள்ளோருக்கு இலங்கைப் பிறப்புச் சான்றிதழ் வழங்க மன்னார் மாவட்டச் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவிலிருந்து நாடு திரும்பி காணியில்லாதிருப்போருக்கும் அரச காணிகளை வழங்க பல தொண்டர் நிறுவனங்களிடம் மன்னார் அரசாங்க அதிபர் கோரியுள்ளார். (மி)

## அம்பாறை..

படையினரால்கருணாவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இணைய தளச் செ... யொன்று தெரிவிக்கின்றது.

## காணாமற்..

பேருக்கு என்ன நிகழ்ந்தது என்ற விடயம் தேடப்பட வேண்டியுள்ளதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது. (32)

## 2இல..

என்ற பெயர்களைக்கொண்ட இவர்கள் இருவரும் தாம் வவுனியா மற்றும் கிளிநொச்சியை சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ளனர். (32)

## அமெ...

துறைமுகப்பாதுகாப்புத் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப் பட்டுள்ளன.

இலங்கை அமெரிக்காவின் துறைமுக பாதுகாப்பு திட்டத்தில் உள்ளடங்கியுள்ள நாடு என்பதும் தற்சமயம் சிறிலங்கா வந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட துறைமுக பாதுகாப்பு திட்டத்தில் அனுபவம் வாய்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (32)

## அனலை..

சிகிச் சைக்காக அனு மதிக்கப்பட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க பொலிசாருடன் அவ்விடத்துக்கு வந்த ஈ.பி.டி.பி. குழுவைச் சேர்ந்த நிசாந்தன் தலைமையிலான குழுவினர் அப்பகுதி மக்களை அச்சுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## அனைத்துப்..

விளையாட்டுத்துறை தொடர்பில் முழுமையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தபோதும் தமக்கு சுற்றுலாத் துறையின் பிரதி அமைச்சு வழங்கப்பட்டமை ஏற்றுக்கொள்ளமுடியாத செயல் என அவர் கூறினார். ஜீவன் குமாரதுங்கவுக்கு விளையாட்டுத் துறை அமைச்சுப்பொறுப்பு வழங்கப்பட்டமையானது உரிய செயல் அல்ல எனக்குறிப்பிட்ட அர்சுன் ரணதுங்க எனக்கு விளையாட்டுத் துறை அமைச்சுப்பதவி வழங்கப்படக் கூடாதென சனாதிபதியுடன் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால ஓர் உடன்பாட்டிற்கு வந்திருக்க வேண்டுமென நம்புவதாக தாம் தெரிவித்ததோடு தாம் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக மாத்திரம் செயற்படப் போவதாக தெரிவித்தார். நேற்றைய தினம் பிரதி அமைச்சர்கள் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட வேளையில் அர்சுன ரணதுங்க அங்கிருந்து வெளிநடப்புச் செய்தமை குறிப்பிடத் தக்கது. (32)

## தியாகி..

நினைவு தினத்தை எழுச்சியுடன் அனுஷ்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெகுசன அமைப்புக் களின் ஒன்றிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (27)

## கதிரவெளிப் பிரதேசத்திலிருந்து

# இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவி

கதிரவெளிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் ஈச்சிலம்பற்று பகுதிக்கு வந்து பாடசாலைகளில் தங்கியுள்ள 200 வரையியான குடும்பங்களுக்குரிய மருத்துவ, சுகாதார தேவைகளை நிறைவேற்று வதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் திருகோணமலை மாவட்டக் கிளையின் தொண்டர்களும் உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட நிர்வாகமும் மூதூர் கிழக்கில் செயற்படும் விருட்சம் நிறுவனமும் ஈடுபட்டுள்ளன. செஞ்சிலுவைச்சங்கத் திருமலை மாவட்டக்கிளை ஈச்சிலம்பற்று பாடசாலையில் நிலையான மருத்துவ முகாம் ஒன்றை நிறுவியுள்ளதுடன் நடமாடும் மருத்துவ கிளினிக்கையும் நடத்த ஆரம்பித்துள்ளது. செஞ்சிலுவைத் தொண்டர்கள் இடம்பெயர் முகாமையும் பராமரித்து வருகின்றனர். தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட நிர்வாகிகள் சனிக்கிழமை ஒரு லொறி உணவுப் பொருட்களை எடுத்துச்சென்று, இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கினர். திருமலை மெதடிஸ்த திருச்சபையினரும் இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் பொருட்களை வழங்கினர். (25)

## –சுவிற்சர்லாந்து சூரிச்சில்–

# 'கானக்குயில்' நிகழ்வில் திருமாவளவன் பங்கேற்பு

(அலுவலக செய்தியாளர்)

சுவிற்சர்லாந்து சூரிச்நகரில் எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதியன்று "கானக்குயில் 2004" நிகழ்வு இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் வதியும் பாடகர்கள் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு இந்நிகழ்வினை சிறப்பிக்கவுள்ளனர்.

ஐரோப்பிய ரீதியாக மிகப்பிரமாண்டமான முறையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக சுவிஸ் கிளையினரால் சிறுவர் மேம்பாட்டு நிதிக்காக நடாத்தப்பெறவுள்ள இந்நிகழ்வில் விடுதலை சிறுத்தை அமைப்பின் தலைவர் திருமாவளவன் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாக்தாத் மேற்கில் அமெ.ஹெலி அப்பாச்சி சுட்டுவீழ்த்தப்பட்டது

(பாக்தாத்)

பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் நேற்று அமெரிக்காவின் அப்பாச்சி ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இதன் போது ஹெலியிலிருந்த இரண்டு அமெரிக்க வீரர்களும் உயிரிழந்துள்ளனர். தரையிலிருந்து சென்ற குண்டு தாக்கி இவ் உலங்குவானூர்தி வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் கடந்த வாரம் தொடக்கம் இன்றுவரை பல்வேறு இடங்களில் தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றமை தெரிந்ததே.



# இந்தியக் கடற்படைக் கப்பல் புதன் இலங்கை வருகிறது

இந்தியக் கடற்படைக் கப்பல் 'தரான்கினி' எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. இக்கப்பல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை இங்கு தங்கியிருக்கும். 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொழும்புத் துறை முகத்துக்கு வரும் முதல் இந்தியக் கடற்படைக் கப்பல் இது வாகும்.

தரான்கினி இதுவரை 17 நாடுகளிலுள்ள 37 துறைமுகங்களுக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு..

மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிய வருகிறது.

சிறிலங்காப் படையினரின் அனுசரணையுடன் இச் சோதனை நடத்தப்பட்டுவருவதாக தெரியவருகிறது.

இதேவேளை மாங்கேணியி லுள்ள இராணுவக் காவலரண்களில் கருணா குழுவைச் சேர்ந்த சிலர் தங்கியிருப்பதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இராணுவத்துடன் இணைந்து அப்பகுதியில் நின்று அப்பகுதியில்பயணம்செய்வோரை அவதானித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.தே.க.

பற்றி அச்சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சபாநாயகர் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி விடுத்த கோரிக்கை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றக்குழுவின் அடுத்த கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். சபாநாயகர் பதவிக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முன்னாள் நீதி அமைச்சர் டபிள்யு. ஜே.எம்.லொக்குபண்டார போட்டியிடவிருக்கிறார். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.